4. அறிவிப்புகள்.

(அ) அனைத்திந்திய அண்ணா திர விட முன்னேற்றக் கழகம் (ஜெயலலிதா அணி), ''அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்'' என்ற பெயரில் செயல்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு கட்சியாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேறக் கழக ஜெயலலிதா அணி,இனிமேல் ''அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்'' என்ற பெயரில் பேரவையில் ஒரு கட்சியாகச் செயல்படும் என்பதைப் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அங்கீகாரம் செய்ததை நான் ஒன்றும் சொல்லவில்லை. என்னைப் பொறுத்த வரையில் நான் தனியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று தேர்தல் சர்ட்டிபிகேட்டில் கொடுத்ததைப்போல் அதே முறையில் செயல்படுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களைப் பொறுத்த வரையில் நான் அளித்த தீர்ப்பு அப்படியே இருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜானகி அம்மையார் அவர்கள் ஒரு அறிக்கையின் வாயிலாக தன் பெயரை..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இதுபற்றி நாம் ஏற்கனவே 35, 40 மணித் துளிகள் பேசி இது சம்பந்தமாக நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் வெங்கடேஸ்வர தீட்சிதர் மற்றவர்கள் எல்லாம் இது எங்களுக்கு சம்பந்தமே இல்லை என்று பேசி, இருக்கிறோம். எனவே உங்களுடைய கட்சி ''அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்'' என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. அருள்கூர்ந்து திரு. பி.எச், பாண்டியனை இதில் இழுக்க வேண்டாம். எனவே அதுபற்றி ஏதாவது பேச வேண்டும் என்றால் மடல் கொடுத்தவர்கள், கொடுக்காதவர்கள் என்ற பிரச்சினை எல்லாம் என்னிடத்தில் இருக்கிறது, நேரடியாக மடல் தொடர்பிலேயே அதை முடித்துக்கொள்ளலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சியினுடைய தலைவராக இருந்தவர் எங்களுடைய கட்சியோடு இணைந்து இரட்டை இலைக்கு அவரே கையெழுத்துப் போட்டு எங்களுக்கு கொடுத்து இருக்

கிறார், அவரும் அரசியலிலிருந்து விலகிக் கொள்வதாக என் பெயரை அரசியல் கட்சி எதற்கும் பயன்படுத்தக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை முடிவு எடுக்க வேண்டியது திரு. பி.எச். பாண்டியன் அவர்களே தவிர நீங்களோ, நானோ, அல்ல. அவர் எழுதித் தருகின்ற மட லின் அடிப்படையில்தான் நான் முடிவு எடுக்க முடியும்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பெற்றோர்கள் விவாகரத்து செய்தால் கூட குழந்தையின் பெயரில் 'இனிசியலை' மாற்ற முடியாது. கணவன் பெயரை மாற்றலாம். குழந்தையின் பெயரை மாற்ற முடியாது (கைத்தட்டல்).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குத் தெரியாது, இது வேறு பிரச்சினை; அது வேறு பிரச்சினை; அந்த கேஸில் நிறைய ஆஜர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய வேண்டுகோளை ஏற்று, மடல் படிவங்களை ஏற்று நான் உங்களுடைய கட்சியை ''அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்'' என்று அங்கீகரித்து இருக்கிறேன். எனவே அதற்கு மேலும் அந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம். ஏன் என்றால் இது ஏற்கெனவே எழுப்பப்பெற்று 35, 40 மணித் துளிகளைக் காவு கொண்டு; மற்றவர்கள் எல்லாம் வருத்தப் பட்டுச் சொன்னது எல்லாம் நினைவில் வைத்துக் கொண்டு இருக்கிறோம். எனவே இப்போது அடுத்த அலுவலுக்குப் போகிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சனையை நாளைக்குப் பார்த்துக் கொள் வோம். இன்றைக்கு அதைவிட முக்கியமானப் பிரச்சினை ஒத்தி வைப்புத் தீர்மானம். எனவே அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நீங்கள் எடுக்கவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தினோம் பிரதான எதிர்க்கட்சிக்கும் அதே போல் மற்ற எதிர்க்கட்சியாக இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கும் அந்த வாய்ப்பை திரும்பத் திரும்ப மறுக்கிறீர்கள், இது பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் வைத்து விவாதிக்க வேண்டிய பொருளே அல்ல.